தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி மாவட்டம்
மாண்புமிகு முதலமைச்சர் மாநில இளைஞர் விருது

பத்திரிக்கைச் செய்தி

சமுதாய வளர்ச்சிக்கு சிறப்பாக சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு 2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரத்தினத்தன்று **"முதலமைச்சர் மாநில இளைஞர் விருது"** வழங்கப்பட்டு வருகிறது. 15 வயது முதல் 35 வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.50,000 ரொக்கம், பாராட்டுப்பத்திரம் மற்றும் பதக்கம் வழங்கப்படுகிறது.

அதன்படி,2018 ஆம் ஆண்டிற்க்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர்வரும் 15.08.2018 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. இவ்விருது தொடர்பாக கீழ்காணும் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. 15 வயது முதல் 35 வயது வரையுள்ள ஆண்/பெண் ஆகியோர் விண்ணப்பிக்கலாம்.கடந்த ஏப்ரல் 1,2017 அன்று 15 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் மற்றும் மார்ச் 31,2018 அன்று 35 வயதுக்குள்ளாக இருத்தல் வேண்டும்.
2. கடந்த நிதியாண்டில் (2017-2018) மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.
3. விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்த பட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும்(சான்று இணைக்கப்பட வேண்டும்)
4. விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு,கண்டறியப்படக் கூடியதாகவும், அளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
5. மத்திய/மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், பல்கலைகழகங்கள்/ கல்லூரிகள் / பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது.
6. விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு விருதிற்கான பரிசீலனையில் கணக்கிற் கொள்ளப்படும்.

விண்ணப்படிவம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளம் www.sdat.gov.in லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 3 நகல்களுடன் கருத்துருக்களை , திரு.ர.வீ.வீரபத்ரன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், அண்ணா விளையாட்டு அரங்கம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி – **627 002** என்ற முகவரியில் அலுவலக நேரத்தில் **30.04.2018** அன்று மாலை **5.00** மணிக்குகள் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு **0462 – 2572632** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும். மேற்கண்ட தகவல்களை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் **உயர்திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.,** அவர்கள் தமது செய்திக் குறிப்பில் தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
திருநெல்வேலி மாவட்டம்